ஞாயிறு, அரசு விடுமுறை நாட்களில்

# காலை 7 முதல் இரவு 9 மணி வரை மெட்ரோ ரயில்கள் இயங்கும்

## நிர்வாகம் அறிவிப்பு

சென்னை, ஜூன் 26: மெட்ரோ ரயில் நிர்வாகம் நேற்று வெளியிட்ட அறிவிப்பு:

தமிழக அரசு தளர்வுகள் அறிவித்ததை தொடர்ந்து மெட்ரோ ரயில் சேவைகள் கடந்த 21ம் தேதி முதல் மீண்டும் தொடங்கியது. கொரோனா பரவலை கட்டுப்படுத்த 50 சதவீத இருக்கைகளில் மட்டும் பயணிகள் அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், மறு உத்தரவு வரும் வரை மெட்ரோ ரயில் சேவைகள் ஞாயிற்றுக்கிழமை மற்றும் இனிவரும் பிற அனைத்து ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் அரசு பொது விடுமுறை நாட்களில் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியில் இயக்கப்பட உள்ளன.

இதேபோல், அனைத்து பயணிகளும் முகக்கவசத்தை சரியாக அணிந்துள்ளனரா என்பதை கண்காணிக்க குழு நியமிக்கப்பட்டுள்ளது. கடந்த 21ம் தேதி முதல் 24ம் தேதி வரையில் முகக்கவசத்தை அணியாமல் அல்லது சரியாக அணியாமல் பயணம் செய்ததற்காக 13 பயணிகளிடம் அபராதமாக ₹2,600 வசூலிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.